அதிகமான அளவுக்கு தொகைகளைப் பெற்றவர் கல்வி அமைச்சர். (சிரிப்பு)

6. அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டமுன்வடிவு 1994, (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/94) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து உள்ளார்கள்.

7. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)— தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டமுன்வடிவு 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு ஆய்வு செய்தல். 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1994). மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/94) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

8. எஞ்சிய கூட்ட நாட்களுக்கும் பேரவைப் பணிகளின்று உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் தள்ளி வைக்கப் பட்டிருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை—பேரவைத் தலைவரின் தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அப்பு நடேசன்

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் ராஜீவ் காந்தி உலகம் போற்றும் உத்தமர்; நீண்டநாள் அவர் கண்ட கனவாகிய பஞ்சாயத்துராஜ் பில் இன்று இருக்கின்றது. இந்த பஞ்சாயத்து பில் பாஸ் ஆக வேண்டும். அந்தச்

@18—4—1994-ஆம் தேதியிட்ட அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.